ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2467/03 - 2025 දෙසැම්බර් මස 15 වැනි සඳුදා - 2025.12.15

*2467/03 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டம்

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 09 ஆவது பிரிவுக்கு அமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அஸ்வெசும நலன்புரி நன்மை வழங்கல் நிகழ்ச்சித்திட்டமானது பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெற்ற திகதியிலிருந்து செயற்படுத்தப்படும் என பிகடனம் செய்கிறேன்.

2025.03.24 ஆந் திகதிய 2429 /02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2025, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி.

1A - PG 7419 — 378 (2025/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அஸ்வெசும நலன்புரி நன்மை கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம்**

**I ஆவது அட்டவணை**

நலன்புரி நன்மை கொடுப்பனவு வழங்கும் திட்டம்

| | *நலன்புரி நன்மை கொடுப்பனவினைப் பெறுகின்ற சமூகப் பிரிவினர்* | *வழங்கப்படும் கால அளவு* | *நலன்புரி பயனாளிகள்/ குடும்பங்களின் எண்ணிக்கை** | *குடும்ப அலகு ஒன்றுக்கு முன்மொழியப்பட்ட மாதாந்த நலன்புரி உதவுத்தொகை (ரூபா)*** |
|---|---|---|---|---|
| **i** | பாதிப்புக்குட்படக் கூடியவர்கள் | 2026, சனவரியிலிருந்து 2026, யூன் வரை இரண்டு மாதங்களையும் உள்ளடக்கியதாக | 480,000 | 5,000 |
| **ii** | வறியவர்கள் | 2026, சனவரியிலிருந்து 2027 யூன் வரை இரண்டு மாதங்களையும் உள்ளடக்கியதாக | 960,000 | 10,000 |
| **iii** | மிகவும் வறியவர்கள் | 2026, சனவரியிலிருந்து 2027 யூன் வரை இரண்டு மாதங்களையும் உள்ளடக்கியதாக | 480,000 | 17,500 |

* குறிப்பு - குடும்பக் கணக்கீடுகளைப் பொறுத்து இந்த மதிப்பீட்டுப் பெறுமதிகள் சற்று மாறுபடலாம்.

** குறிப்பு - குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 02 அல்லது 02 இற்கு குறைவாக இருந்தால், பயனாளிகளுக்கு உரிய கொடுப்பனவில் பாதி மட்டுமே வழங்கப்படும்.

**II ஆவது அட்டவணை**

மாற்றுத் திறனாளிகள், கண்டறியப்படாத சிறுநீரக நோயாளிகள் (CKDU) மற்றும் முதியோர் உதவுத்தொகை பெறுநர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குதல்

| *நலன்புரி நன்மை கொடுப்பனவினைப் பெறுகின்ற சமூகப் பிரிவினர்* | | *நன்மைகளைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் நபர்களின் எண்ணிக்கை* | *மாதாந்த நலன்புரி நன்மை உதவித்தொகை (ரூபா)* |
|---|---|---|---|
| **i** | மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி பெறுகின்றவர்கள் | 200,000 | 10,000 |
| **ii** | சிறுநீரக நோய்க்கான (CKDU) உதவி பெறுகின்றவர்கள் | 70,000 | 10,000 |
| **iii** | முதியோருக்கான உதவி பெறுகின்றவர்கள் | 1,000,000 | 5,000 |

குறிப்பு - (i) II ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் 2026, திசெம்பர் 31 வரை செலுத்தப்படல் வேண்டும். இருப்பினும், 2025, மாச்சு 24 ஆந் திகதிய 2429/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள இடைமாறல் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுகளைப் பெற்ற குடும்பங்களின் பயனாளிகள், இந்த வர்த்தமானியின் கீழ் கூறப்பட்ட கொடுப்பனவுகளைப் பெறாவிட்டாலும், அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளைப் பெற உரிமை உண்டு. நலன்புரி நன்மைகள் சலுகைகள் பதிவேட்டின் மூலம் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கும் இந்த சலுகைகள் அதே வழிமுறையின் மூலம் செய்யப்பட வேண்டும். நலன்புரி நன்மைகள் பதிவேட்டின் மூலம் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கும் இந்த நன்மைகள் அதே முறையின் மூலம் செலுத்தப்படல் வேண்டும்.

(ii) மேலும், அட்டவணை II இன் கீழ் குறிப்பிடப்பட்டவாறு கொடுப்பனவு செலுத்தும்போது, சமூக நலன்புரி நன்மைகள் பதிவேட்டில் பதிவு செய்யப்படாவிட்டாலும், தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான செயலகம் மற்றும் முதியோருக்கான செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு, தற்போது சலுகைகளைப் பெற்று வரும் பயனாளிகளும் இந்த நலத்திட்டத்தின் மூலம் மேற்கூறிய உதவித் தொகையைப் பெற உரிமை உண்டு.

EOG 12-0122

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.